# பதிவாளர் நாயகம் திணைக்களம்
# விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தல்

......................................... மாவட்டத்தில் ....................................................... பிரிவின்

முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி

சிங்கள மொழி/ தமிழ் மொழி

மேற்குறிப்பிடப்பட்ட பதவிக்காக முஸ்லிம் ஆண்களிடமிருந்து மாத்திரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பம் உரிய ப.செ.பி. 75 படிவத்தில் ( தமது கையெழுத்தில்) நிரப்பி அனுப்பப்படல் வேண்டும். உரிய படிவம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் பதவி வெப்தளத்தில் (www.rgd.gov.lk) அல்லது இந்த அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்ட பதிவகங்களில் அல்லது பிரதேச செயலகங்களில் பெற்றுக் கொள்ள இயலும்.

02. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் / மேலதிக பதிவாளர் நாயகத்திற்கு வருடம் 20........................................ மாதம் ................ ந் திகதி அல்லது அதற்கு முன்பதாக கிடைக்கக்கூடியவாறு, பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

03. விண்ணப்பம் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரருக்கு கீழ் குறிப்பிடப்படும் தகைமைகள் இருத்தல் வேண்டும்.

i. <u>விண்ணப்பதாரர் இலங்கையராக இருத்தல் வேண்டும்</u>. “இலங்கையர்” என்பதனால் அடையாளம் காணப்படுவது பரம்பரையாக அல்லது பதிவு செய்தல் மூலம் இலங்கை பிரஜையாக இருத்தல் என்பதாகும்.

ii. <u>வதிவிடம்</u> - ............................................................................................................................ ........................................................................................................................ முஸ்லிம் விவாகப் பிரிவிற்கு உள்ளடக்கப்பட்ட இணைப்பு 1 இல் குறிப்பிடப்பட்ட கிராம பட்டியல்/ கிராம அலுவலர் பிரிவினுள் தமக்கு உரித்தான இல்லம் உள்ள மற்றும் நிரந்தர வதிவிடம் உரியவரான, அங்கு பல காலம் வதிந்திருந்த காலத்தின் காரணமாக போதியளவான ஆதனத்திற்கு உரித்தான கிராமத்தாரின் மதிப்பினை பெற்றவராயிருத்தல் வேண்டும். நிரந்தர வதிவிடத்தினை உறுதிப்படுத்துவதற்காக தேர்தல் இடாப்பில் பெயர் உட்புகுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

iii. <u>நடத்தை</u>
விண்ணப்பதாரர் சிறந்த நடத்தையுள்ளவராயிருத்தல் வேண்டும் என்பதுடன், அதனை உறுதிப்படுத்துவதற்காக தான் வதியும் பிரிவின் கிராம அலுவலரினால் வழங்கப்பட்ட நடத்தை மற்றும் வதிவிடம் பற்றிய சான்றிதழ் (டி.எஸ்.04 சான்றிதழ்) மற்றும் பிரதேசத்தின் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பொலிஸ் அறிக்கையின் பிரதிகள் விகிதம் விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

**iv.** <u>வருமான தன்மை</u>
விண்ணப்பதாரரின் ஆதனம், காணி நிலங்களில் இருந்து கிடைக்கும் ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்தக்கூடிய வருடாந்த வருமானம் ரூ.300,000/- இனை விட அதிகமாயிருத்தல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பதாரர் கடன் சுமையில் இருந்து விடுபடல் வேண்டும். ஆதனங்கள் காணிகளின் உரிமையினை உறுதிப்படுத்துவதற்காக காணிப் பதிவாகத்தில் 06 மாதங்களுக்குள் பெற்றுக் கொள்ளப்பட்ட காணிப்புத்தக சுருக்கப்பிரதியினை சமர்ப்பித்தல் வேண்டும்.

v. <u>வயது</u> – விண்ணப்பதாரரது வயது விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியில் வயது வருடங்கள் 30 இற்கு குறையாததாக இருத்தல் வேண்டும் என்பதுடன் 50 வருடங்களுக்கு மேற்படாததாக இருத்தல் வேண்டும்.

vi. <u>திருமண நிலைமை</u> – விண்ணப்பதாரர் திருமணமானவராயிருத்தல் வேணடும்.
விதவைகள்/தபுதாரர் அல்லது விவாகரத்தவராயிருத்தல் கூடாது.

vii. <u>கல்வித் தகைமைகள்</u> – முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்கான அடிப்படைத் தகைமைகள்.

பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்களம் / தமிழ் மொழிக்காக ( பதவிக்குரிய மொழி மூலம்) சிறப்பு சித்திகள் உட்பட க.பொ.த (சா.த) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் மூன்றுடன்(03) ஆறு விடயங்களில் (06) சித்திப் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சம்மான பரீட்சையில் சித்திப்பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்**- க.பொ.த(சா.த) அல்லது அதற்கு சம்மான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

மௌலவி சான்றிதழ் அல்லது அராபி டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல், மேற்குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகளினைப் பூர்த்தி செய்திருத்தலாக கருதப்படும்.

கருத்திற் கொள்ளவும்- முஸ்லிம் விவாக பதிவாளர் பதவிக்காக தேவையான குறைந்த கல்வித்தகைமை உள்ள விண்ணப்பதாரர்கள் தோற்றாவிடின் உரிய மட்டத்தினை விட குறைந்த கல்வித் தகைமை உள்ள விண்ணப்பதாரர்கள் பற்றி கருத்திற் கொள்ள இயலும்.

viii. <u>சமூக நிலைமை, மக்கள் விருப்பம்</u> – விண்ணப்பதாரர் பிரதேசவாசிகளின் நலனோம்புக்காக அரசியல் அற்ற சுய அமைப்பில் காட்டிய ஒத்துழைப்பு , வகித்த பதவிகள் மற்றும் பிரதேசத்தின் அபிவிருத்திக்காக திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் பொழுது காட்டிய ஒத்துழைப்பு பற்றிய பாராட்டுடனான கடிதங்கள் ஆகியன மற்றும் முக்கியத்துவமான குடும்ப பின்னனியில் என்பவற்றில் அவதானத்தினை விழைத்தல் இயலும்

ix. <u>ஆளுமை</u> – விண்ணப்பதாரர் சிறந்த ஆளுமையுடையவராயிருத்தல் வேண்டும். உடல் மற்றும் உள ஊனமுற்றவராயிருத்தல் கூடாது.

x. <u>உத்தேச அலுவலக அமைவிடம்</u> –

பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

04. விண்ணப்பிப்பதற்கு பொருத்தமற்றவர்கள் :-

i. முழு அல்லது அரை நேரம் அரசாங்கத்தில் அல்லது பகுதியளவான அரசாங்க திணைக்களத்தில் அல்லது தனியார் நிறுவனத்தில் பதவியினை வகிப்பவர்கள்.
ii. நீதிமன்றத்தில் குற்றவாளியாக்கப்பட்டவர்கள் அல்லது தறபொழுது நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் வழக்கின் எதிராளிகளாக உள்ள அல்லது வழக்கினை தொடுப்பதற்கு உரிய தற்பொழுது நீதிமன்றம்/ பொலிஸ் அல்லது அவ்வாறான நிறுவனத்தின் மூலம் பரிசீலனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கும் நபர்கள்.
iii. சட்டத்தரணி அல்லது நொத்தாரிசு, பொறியியலாளர் மற்றும் கணக்காளர் போன்ற பதவிகளில் உள்ளவர்கள்.
iv. மாதாந்த சம்பளம் பெறும் மக்கள் பிரதிநிதிகள் ( பாராளுமன்ற மந்திரிகள்/ மாகாண சபைகள் / மாநகர சபை/ நகர சபை/ பிரதேச சபை மந்திரிகள் போன்றவர்கள்)
v. பொதுவான வினைத்திறனின்மை காரணமாக இளைப்பாற்றப்பட்ட அரசாங்க அலுவலர்கள் ( தாபன விதிக் கோவையின் II வது அத்தியாயத்தின் 7:1 பிரிவு)

05. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களிடம் நியமனம் அளிக்கப்படுவது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு சட்டத்தின் IV வது அத்தியாயத்தின் ஒழுங்குவிதிகள் மற்றும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கைகளினை நடைமுறைப்படுத்தும் பொருட்டு தற்பொழுது நிழவும் மற்றும் தொடர்ந்து வரும் காலங்களில் சட்டமாக்கப்படும் சட்டத் திட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியதாக செயற்படுவதாக அவர் கட்டுப்பட்டுள்ளார் என்னும் நிபந்தனைகளின் கீழ் மற்றும் பதினோரு மாதங்கள் கடக்கும் வரை பரிசீலனைக்கு உட்படும் விதத்தில் ஆகும். பத்து மாதங்கள் முடிவில் அவர் கடமையில் நிரந்தரமாக்குவதற்கு பொருத்தமானவரா என கருதப்படுமாயின், சுய கடமைகள் பற்றிய சட்டதிட்டங்கள் பற்றியும், திணைக்களத்தின் சட்ட ஒழுங்குகள் பற்றியும் தனது அறிவினை ஆராயும் பொருட்டு நடாத்தப்படும் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். அந்த பரீட்சையில் போதியளவான சித்திப் பெறப்படுமாயின் பரிசீலனை காலம் முடிவடையும் பொழுது அவர் பதவியில் நிரந்தரமாக்கப்படுவதற்கு பொருத்தமானவராவார்.

அக்காலத்தினுள் அவர் பதவிக்கு பொருத்தமற்றவர் என கருதப்படுமாயின், அல்லது நடாத்தப்படும் பரீட்சையில் சித்திப்பெறாவிடின் அறிவித்தல் இன்றி பதவியில் இருந்து நீக்குவதற்கு இயலும்.

06. விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட எந்தவொரு தகவல்களும் பொய்யானது அல்லது தவறானது என தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாக தெளிவாயின் விண்ணப்பதாரர் பதவிக்கு பொருத்தமற்றவராக்கப்படுவதற்கும், நியமனம் பெற்றதன் பின்னர் தெளிவாயின் உடனடியாக கடமையில் இருந்து நீக்கப்படுவதற்கும் காரமாகும்.

.........................................................................................

மாவட்ட செயலாளர் / மேலதிக பதிவாளர் நாயகம்.

20....................................... ந் திகதி,
.............................................................
மாவட்ட செயலகத்தில் .

இணைப்பு 1

# பதிவாளர் நாயகம் திணைக்களம்
# விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தல்

......................................... மாவட்டத்தில் ........................................................ பிரிவின்

முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி

சிங்கள மொழி/ தமிழ் மொழி

(மேற்குறிப்பிடப்பட்ட விண்ணப்பதாரர்கள் கீழ் குறிப்பிடப்பட்ட கிராம அலுவலர் பிரிவு / கிராமத்தினுள் நிரந்தர வதிவிடத்தினைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.)

| கிராம அலுவலர் பிரிவு/ கிராமம் பட்டியல் | | |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

..........................................................................................

மாவட்ட செயலாளர் / மேலதிக பதிவாளர் நாயகம்.